**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழும் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ("ஆணைக்குழு") 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா

என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 92(அ) பந்தியின் பிரகாரம் முழுமையான பெறுமாத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற கிரயப் பெறுமதி ரூபா 1,469,302 ஆன | 2022.01.01 ஆம் திகதி சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் உங்களால் காண்பிக்கப்பட்ட சொத்துக்களுக்குரிய சொத்து தொகுதிகள் முழுமையாக | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சொத்துக்கள் தொடர்பாக நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் நாளதுவரையாக்கப்படுமாயின் அசாதாரண பயன்தரு காலம் அதிகரித்துக் காண்பிக்கப்படும். உங்களால் குறிப்பிடப்பட்ட பிரகாரம் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை அதிகரிப்பதாயின் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு மிகை மதிப்பீட்டுக்கு உட்படும். | |

**1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்படும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 12,632,009 மற்றும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,740,600 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 14,172,609 ஆன கடன் மீதி, கடன் நிபந்தனைகளில் இணங்காமை, பொது கோவை ஒன்று காணப்படாமை மற்றும் பிணையாளர்களின் தகவல்கள் போதியளவில் காணப்படாமையின் காரணமாக அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | கடனை அறவிடுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சி, சட்ட உத்தியோகத்தரின் ஆலோசனையின்றி முன்கொண்டு செல்ல முடியாதிருந்ததுடன் புதிதாக நியமனம் கிடைத்த சட்ட உத்தியோகத்தர் மூலம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற உடன்படிக்கை செய்பவர்களுக்காக எதிர்காலத்தில் முற்கொடுப்பனவு செய்யப்பட்ட மீதி ரூபா 341,088 மீளாய்வாண்டு வரையிலும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்கொடுப்பனவாக சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு அல்லது பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டுமதல் கொண்டு வரப்படுகின்ற மகாவலி செயற்திட்டத்துக்குரிய கூட்டு மொத்தமான ரூபா 834,224 ஆன கடன்கொடுத்தோர் மீதி மற்றும் பாடசாலை புத்தாக்கங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 330,000 மீதி என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்துவைப்பதற்கு றடவடிகதை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதியினை தீர்த்துவைப்பதற்கான தேவையான மிகுதி நடவடிக்கைகளுக்காக இலங்கை மகாவலி அதிகார சபையிலிருந்து தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக 02 சந்தர்ப்பங்களின் போது மின்னஞ்சல் ஊடாகவும் மற்றும் மேலும் ஒரு சந்தர்ப்பத்திலும் கடிதம் ஒன்றின் மூலமும் ஆக 03 சந்தர்ப்பங்களின் போது மீள் நினைவூட்டல் மேற்கொள்ளப்பட்டு 2023.03.16 ஆம் திகதிய மேலும் ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆணைக்குழுவின் தரப்பினரிடமிருந்து கடன் கொடுத்தோர் மீதியை தீர்த்து வைப்பதற்காக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் இலங்கை மகாவலி அதிகார சபையிலிருந்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்காமையின் காரணமாக கடன்கொடுத்தோர் மீதியை தீர்த்து வைப்பதற்காக ஆணைக்குழுவிற்கு முடியாதிருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 756(2)(அ) | பொருள் மெய்மையாய்வு சபையின் உள்ளடக்கம் - இந்த பதவியணியின் நேரடியாக களஞ்சியத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற உத்தியோகத்தர்களினாலும் அவர்களுக்கு அல்லது அவர்களுக்கு அருகில் இருக்கும் உத்தியோகத்தர்களும் தவிர ஏனைய பொறுப்புவாய்ந்த | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றோம். சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்கள் இருவரினை உள்ளடக்கியிருக்க வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவினால் 05 உத்தியோகத்தர்களை உடைய மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் XIV அத்தியாயத்தின் 1:1, 3.1 மற்றும் 4.1 | கடமைகளை நிறைவேற்றுவதற்காக பிரயாணம் செய்வதற்கு குறித்த அரசாங்கத்தின் உத்தியோகத்தருக்கு தாபன விதிக் கோவையின் பிரமாணத்தின் பிரகாரம் பிரயாணச் செலவுகள் செலுத்தப்படுவதுடன் கடமைப் பிரயாணங்கள் மேற்கொள்ளப்படுமாயின் அந்த சந்தர்ப்பத்தின் போது காணப்படுகின்ற நிலைமையின் பிரகாரம் இயலுமானவரை விரைவாக மிகவும் குறுகிய தூரம் அல்லது அரசாங்கத்திற்கு குறைந்த செலவினம் ஏற்படும் வகையில் இருக்க வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக பொருள் மெய்மையாய்வுக்காக பங்குபற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு ஆணைக்குழூவின் வாகன வசதிகள் வழங்கப்பட்டு எரிபொருள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காகவும் முறையே ரூபா 48,224 மற்றும் 56,488 செலவிடப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம். 2024 ஆம் ஆண்டின் போது அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாபனவிதிக் கோவையின் ஏற்படுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் சட்டத்தில் 11(1) ஆம் பந்தி | இலங்கையின் பேடன் அனுமதி பத்திரம் கிடைக்க புத்தாக்குநர்களை உட்சாகப்படுத்துவதற்காக புத்தாக்கம் தொடர்பான சனாதிபதி மானியம் வழங்கவேண்டியிருந்த போதிலும் 2017 முதல் 2023 வரை 07 வருடகாலத்திற்காக சனாதிபதி மானியம் | இதற்காக 2023 யூன் முதல் சனாதிபதி அவர்களிடமிருந் தினம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக விசாரணை செய்த போது இதுவரை குறித்துரைத்த | இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வழங்கப்பட்டிருக்கவில்லை. | திகதியொன்று வழங்கப்படவில்லை. அது ஆணைக்குழுவின் நிர்வாகத்திற்கு அப்பாற்பட்டதாக இருந்தமையை தயவுடன் குறிப்பிடுகின்றோம். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 10,586 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,992,448 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,003,034 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டிக்காக அரசாங்கத்தின் பங்களிப்பு 6,377,000 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சரியான சாத்தியவள ஆய்வு மற்றும் திட்டமொன்று இன்றி கிடைக்கின்ற விண்ணப்பங்களை கையாளுவதற்காக ரூபா 4,600,000 தொகை செலவிடப்பட்டு 2018 ஆம் ஆண்டின் போது தரவு முறைமையொன்று தயாரிக்கப்பட்ட போதும் ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டிலிருந்து இதுவரை கிடைக்கப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 39 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு வரையில் அதன் தரவு முறைமை செயலிழந்த நிலையில் காணப்பட்டது. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம். தற்போது ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் தரவு முறைமையை பேணிச் செல்கின்றனர். | அரசாங்கத்தின் செலவினங்களை மேற்கொள்ளும் போது செயற்றிறனாகவும் வினைத்திறனாகவும் ஆன வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கல்விசார் வியாபார கண்காட்சி செலவினத்திற்காக தொம்பே பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 500,000 தொகை பிரதேச சபையின் | தொம்பே பிரதேச சபையின் கடிதத் தலைப்புடன் மண்டபக் கட்டணம், மின்சாரம், நீர், மேசை கதிரைகளுக்காக ரூபா 500,000 தொகை | அரசாங்கத்தின் சரியான கணக்கு செலவுவைப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியொகபீர்வ வங்கிக் கணக்கிற்கு எரித்தல்லாத கலாச்சார மற்றும் சமைய அலுவல்கள் சமையக் குழுவின் பெயரிலான கணக்கில் செலவுவைக்கப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டதுடன் உரிய கணக்கு தொடர்பாக மக்கள் வங்கியில் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் காசோலை ஊடாக கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. | |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகாப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை புத்தாக்குனர்களின் நிதியத்தில் மீதி ரூபா 12,837,184 மற்றும் விதை காப்பக நிலைய நிர்மாணத்திற்கு வழங்கப்பட்ட தொகையில் எஞ்சிய தொகையான ரூபா 13,762,138 முறையே 2017 மற்றும் 2020 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டது. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம். COVID 19, பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களினாலும் தொழிநுட்பரீதியான விதை காப்பங்கள் மூலம் புத்தாக்குனர்களுக்கு சேவை வழங்குதல் பல்வேறு நடைமுறையான பிரச்சினைகள் தோன்றியிருந்தது. அதனால் இந்தத் தொகையை மிகவும் ஆக்கபூர்வமானதாக புத்தாக்குநர்களுக்கு சேவை ஒன்றை வழங்குவதற்காக ஈடுபடுத்தும் முறைமையொன்று தயாரிப்பதற்கு கலந்துரையாடப்படுகின்றது. | நிதியத்தை உரிய பிரகாரம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்.**

**4.1 செயல் நடவடிக்கத் திட்டம்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 இன் செயல் நடவடிக்கைத திட்டத்தில் தரவு முகாமத்துவம் மற்றும் இணையதள பக்க அபிவிருத்தியும் மற்றும் நிலையான சொத்துக்களை கைப்பற்றல் என்ற 02 செயற்பாடுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 9,000,000 ஆக இருந்த போது மீளாய்வாண்டின் போது எந்தவொரு செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். 2023 ஆம் ஆண்டின் காலாண்டு ரீதியான அறிக்கையில் உரிய செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ளாமைக்கான காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட நிதி குறித்த காலத்தின் போது கிடைத்திருக்க வில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |